# யாதுமாகி...

ஆளுமையின் ஓர் அங்கம்

*முதுகலை & தமிழாய்வுத்துறையின் மாதாந்திர மின்னிதழ்*

**மலர் – 2**

**செப்டம்பர் – 2023**

திருவள்ளுவர் ஆண்டு

2054 (ஆவணி – புரட்டாசி)




**முதுகலைத் தமிழாய்வுத்துறை**

**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)**

தேசியத் தர மதிப்பீட்டு நான்காம் சுற்றில் 'A++' அங்கீகாரம் பெற்றது (CGPA 4-க்கு 3.69)

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

திருச்சிராப்பள்ளி – 620020

தமிழ்நாடு, இந்தியா

| | | |
|---|---|---|
| இதழ் | : | யாதுமாகி |
| முதன்மையாசிரியர் | : | முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,<br>தேர்வு நெறியாளர்,<br>இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத் தலைவர். |
| இணை ஆசிரியர் | : | முனைவர் வ.முஹம்மது யூனுஸ், இணைப்பேராசிரியர் |
| துணை ஆசிரியர் | : | திரு. க.இம்தாதுல்லாஹ், இணைப்பேராசிரியர் |
| பொறுப்பாசிரியர் | : | **திரு. வீ.விஜய்**<br>உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை. |
| பிரதி | : | மின்னிதழ் |
| வெளியீடு | : | ஆகஸ்ட் 2023 |


---


*இதழாசிரியர் குழு*

முனைவர் த.செல்வராசு

முனைவர் ஷே.நாகூர்கனி

திரு. கா.முகமது இஸ்மாயில்

முனைவர் மு.சாதிக்பாட்சா

முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ்

முனைவர் க.சிராஜுதீன்

முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

முனைவர் க.இக்பால்

முனைவர் மு.ஹ.ஜஹானாரா

*மாணவ ஒருங்கிணைப்பாளர்கள்*

ப.அ.முஹம்மது ஆதில் முர்ஷித்
ஷா.முஹம்மது அஸ்ரின்
ஜோ.ஜார்ஜ் இம்மானுவேல்
பி.லீ.தயாநிதி
ஷா.முகமது அர்ஷத்
உ.பாபர் முகமது இஸ்மாயில் காஜா
ஜா. முகமது இலியாஸ்
மு.யாசர் அராபத்
மு.முகமது இமாதுதீன்
ரா.பிரீத்தி
ம.தாரணி
செ.ராகவி


---

அரிதாரத்திற்குள்
தெரிகிறது அசல்
அமைதியும் அனிச்சையென
சில சமயம்
நகைக்கும் நகல்கள்
தேடும்
சுயம்வரத்தில்
சுயம் தோற்றது மிச்சம் தான்
வேடங்களாய்
உலாவும் வேடதாரிகளாய்
ஓரங்கத்தில்
ஓர் அங்கமாய்
தொங்கும்
திரைச்சீலைகள்
யாரும் விலகுவதுமில்லை
யாருக்கும் விலக்கப்படுவதும்
இல்லை
அகம் தேடும்
அசல் அடையாளம்
அங்கீகாரம் பெற
ஆளுமையின் ஓர் அங்கமென
'யாதுமாகி'
நிற்கிறது தமிழ்

– **வீ.விஜய்**
(பொறுப்பாசிரியர்)

## காதல் (கவிதை) நறுக்குகள்...



* கற்றுவைத்திருந்த எந்தத்
தற்காப்புக் கலையும்
உன்னிடத்தில் பலிக்கவில்லை
சிறு கண்ணசைவில்
வீழ்த்திவிட்டாய்.

* உன்னை எதுவும் அழகாக்கிவிடாது
எல்லாவற்றையும்
நீ தான் அழகாக்குகிறாய்!

* நீ கிடைக்கலாம்
கிடைக்காமல் போகலாம் ஆனால்
உன்னால் கிடைக்கும் எதுவும்
எனக்கு சம்மதம்தான்.

* முதலில் முட்கள் முளைத்தாலும்
கடைசியில் பூத்தது
பூ!

*உன் காதலும் என் காதலும்
பேசிக்கொண்டிருந்தன
நாம் பேசாமல் பார்த்துக்
கொண்டிருந்தோம்.

**வி. ஹரிஷ்ராஜ்,**
**முதுகலை முதலாமாண்டு**



## சொன்னது யார்?

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**(புறநானூறு, கணியன் பூங்குன்றனார்)**

## ஆசை...



வெடித்துவிடும் பருத்தி பஞ்சாய்
துடித்து வரும் ஆசைகளை
மடித்து வைத்து நான் மறைக்க
மறைக்க மறைக்க
ஆசை பெறுக
புத்தரின் போதனையில்
ஆசை அடக்க நான் முயல
உன் இருவிழி போதையிலே
புத்தரின் போதனையும்
புத்தாண்டு சபதமாய்
மறந்து, துறந்து
ஆசை மீண்டும் பறந்து
தேக்கிவைத்த அணையை
அறிவிப்பிலாமல் திறப்பது போல்
உந்தன் மீது எந்தன் ஆசை
கடலில் கலந்த துளியின் ஓசை

**ஷா. முஹம்மது அர்ஷத்,**
**முதுகலை இரண்டாமாண்டு**





## தங்கைக்கு...



வறண்டு போன என் வாழ்க்கையில்
வரமாக வந்த தேவதை அவள்...
தங்கம் போல் தங்கையாக என்னை
தங்க தட்டில் தாங்க வந்த தாமரை அவள்...

தங்கையை எண்ணி கவிதை எழுத
முனைந்தேன்
எழுதுகோல் என்னை பார்த்து சிரித்தது
என்ன வென்று கேட்க
கவிதைக்கே கவிதை எழுதும் பித்தனை
பார்த்தேன் சிரித்தேன் என்று குலிம்பியது
எழுதுகோல்.....

என்னோடு சின்னவள்தானே என
தலைகனத்தோடு இருந்துவிட்டேடன்.
அப்போது புரியவில்லை...
அவளின் அன்பும் அவளின் அரவணைப்பும்
என் தங்கையை நான் இழக்க வில்லை
நான் இழந்தது என் அன்னை என்று
எனக்கு புரிந்த போது
அவள் என்னோடு இல்லை...
இருக்கும் போது எதையும்
உதாசினம் படுத்தாதே
ஏமாற போவது ஏனோ நீ மட்டும் அல்ல...

**பீ. முகமதுசில்மிசுல்தான்,**
**முதுகலை இரண்டாமாண்டு**



## சொன்னது யார்?

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே...**
**(மணிமேகலை, சீத்தலை சாத்தனார்)**

## பதின்பருவக் காதல்...



பள்ளி பருவத்திலே
துள்ளும் வயதினிலே
உள்ளம் சிலுக்குதடி
உலைப்போல கொதிக்குதடி
சிலைப்போல நீ இருக்க
அலைப்போல நான் மிதக்க
மழைப்போலே நீ வந்தாய்
மனம் உள்ளே நீ சென்றாய்
கல கலன்னு கால் கொலுசு
காதில் வந்து விழுகயிலே
சிலு சிலுன்னு அடிவயிறு
சில்லறையாய் சிதறுதடி
தக தகன்னு உன் மேனி
பார்வையிலே படும்போது
பட படன்னு என் இதயம்
தடம் மாறி துடித்ததென்ன

**அபிமன்யூ,**
**முதுகலை இரண்டாமாண்டு**



## நிம்மதியின் முகவரி...

ஊரின் முனையில் ஒற்றைத் திண்ணை
திண்ணைக்கு ராஜா ஒற்றை ஞானி
ஞானியைத் தேடி பல ஊர் மக்கள்
பழுதான வாழ்க்கையைப் பண்படுத்த
வருவர்.
வாழ்கையை வாழப் பணமும் இல்லை
வறுமையில் வாட மணமும் இல்லை
வாழ்வின் இறுதி மரணம் என்பர்
வாழ்வே இருளாய்க் கொண்டார் பலர்
பணமும் புகழும் அதிகம் இருந்தும்
பொய்மைத் துணையால் புழுவாய்த் துடிப்பர்

யாதுமாகி

வாழும் வாழ்வு அனலாய்க் கொதிக்க
ஆறுதல் தேடித் திண்ணைக்கு வருவர்
சூனியம் கஷ்டம் கடனில் மூழ்கி
நஞ்சுண்டவர் போல் துடித்து வெதும்பி
ஞானியின் வாக்கை வாழ்க்கையாய் ஏற்க
நிற்போரைப் பார்த்து சிரிப்பார் ஞானி.
பணமும் உறவும் இல்லாத என்னிடம்
அவை பற்றிக் கேட்டு அமைதி வருமா?
உன்னை என்னை படைத்த பரம்பொருள்
நித்தம் அதை நாடி நிம்மதி பழகு !

**லா.முகமது யூசுப்,**
**முதுகலை இரண்டாமாண்டு**

செத்தும் பல மக்களுக்குப் பொறுப்பாளாய்த்
தொடர்வானே இவன்!

இவன் இல்லாமலே ஆனாலும்;
பல சாதிய செருப்புகளுக்கு இவன்
செருப்பு பதில் சொல்லும்!

இன்னொரு செருப்பை
தந்துதவுங்கள்!!
யாருக்கேனும் பயன்படும்!!!

**ஜா. முகமது இலியாஸ்,**
**முதுகலை முதலாமாண்டு**



## தாடிக்காரன்...

இவன் வெந்த நெருப்பில் கனல்
சற்று கொதிக்கவே செய்கிறது!

அணைக்கத்தான் ஆயிரம் பேர்!
அணையா நெருப்பாய் அகிலத்தை அலற
விடும் கருப்புச்சட்டை!



அன்று தெரியவில்லை
இக்கண்ணாடியே தமிழ் நாட்டின்
உயிர் நாடிஎன்று!

தடியொன்று வைத்து
படி படி என்றவன்!
அதனாலேயே..
பலபேரின் பிடியில் சிக்காமல் திளைக்கிறது
தமிழகம்!

விழித்துக்கொள் என்றானே! இன்றும்
நினைக்கும் போதுசற்று வலிக்கத்தானே
செய்கிறது!
தாடிக்காரனின் இழப்பு!

அடிப்பது எவனாக இருப்பினும்
பதில் கொடுப்பது அத்தாடிக்காரனும்!!
அத்தடியும்தானே!!

## நன்றி...



எனை உருவாக்கினாய்
உன் மூச்சினை என் மூச்சாக்கினாய்
எனை வளர்ப்பதில்
என் தாய் தந்தையினும் மேலாகினாய்
என் கல்விக்கு ஆசானாகி, நீயே
என் வாழ்வின் வழிகாட்டியுமானாய்!
என் சோகத்தை சுகமாய் மாற்றினாய்
என் தோல்வியை வெற்றியாக்கினாய்
என் தாழ்வினை உயர்வாக்கினாய்
என் மகிழ்ச்சியில் என் உறவாகினாய்
எனை மட்டுமின்றி
எல்லா உயிர்களையும்
உருவாக்கி உனதாக்கினாய்
வாழ்ந்துகொண்டிருக்கும் இறைவா
உமக்கே நன்றி என்றும்...

**செ. ராகவி,**
**இளங்கலை முதலாமாண்டு.**



## பெரியோர் வாழ்த்து...

ஒன்றே குலமாய் எண்ணுக
இரண்டே போதுமெனத் தேர்க
முக்காலத்தை உணர்ந்து
நான்மறை போற்றுக
ஐம்பூதங்களை வணங்கினால்
ஆறாதவடு மறைந்து போகலாம்
ஏழு அதிசயங்களால் ஏறுக
எட்டாத உயரத்தில்
ஒன்பது கிரகங்களும்
பத்தாமல் போனாலும்
பதினொன்றாய் நின்றால்
பன்னிரண்டாய் ஆகிடுக
பதிமூன்றாய் அல்லாமல்
பதினான்கு புலனடங்கினாலும்
பதினைந்தோடு சேர்ந்து முயல்க

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க

**சே. ஜெரினா பேகம்**
**இளங்கலை முதலாமாண்டு.**

## இயற்கையின் மடியில்...



தேடி வந்து தேகம் தீண்டும் தென்றலும்
மழை நேரம் மணக்கும்
மண் வாசனையும்
பூக்களின் புன்னகையும்
மலையின் மௌனமும்
துள்ளி வரும் கடல் அலையோடு
இயற்கையின் மடியிலோர் இன்பச் சுற்றுலா..!

**வே. சிவா,**
**இளநிலை இரண்டாமாண்டு**



## என்னவள்...



காதலியை கரம்பிடிக்க
வீட்டிலோ எதிர்ப்பு,
உற்றார் உறவினரோ
எதிர்ப்புக்கு பலம் சேர்க்க
மனமில்லா திருமணமோ
நடந்தது ஒருவளோடு,
மனதிற்கு பிடித்தவள்
எதிர் வீட்டினிலே
குடியிருக்க,
அந்த வீட்டைக்
கடக்கும்போதெல்லாம்
ஏதோ ஒரு உணர்வு
என்னவள் என்று!
சகிப்புடன் வாழ்க்கை,
மூன்று வருடத்தில்
விவாகரத்து,
என்னவளோ காத்திருந்தாள்,
அரவணைத்து
உயர்த்தினாள் என்னை
என்னவளைக்
காதலிக்க,காதலிக்க
இன்னும்,
புகழின் உச்சிற்கே
உயர்த்துத்துவாள்
என்ற நம்பிக்கை
அவளே என்னவள்
தமிழ் எனும் பெண்ணவள்.

**வே. விக்னேஷ்வரன்,**
**முதுகலை முதலாமாண்டு.**



## அவள் முகம்... (சிறுகதை)



**உ**ருட்டிக்கொண்டு வந்து விட்டது தொடரி.கீழே இறங்க ஒரேபரபரப்பான நடைபாதை.கரே முரே என கத்தல்கள்,ஒருபக்கம் டீயும், சுண்டலும் விற்றுத்தீர,சூடான சோளத்தின் வாசனை மூக்கை வந்தடைந்தது. இது நான் பார்த்த படித்த சேலமா! என்ற ஐயம் எழவே சேலம் ரயில்வே உங்களை அன்புடன்வரவேற்கிறது என்ற பதாகையை பார்க்க ஐயம் தீர்ந்தேன். 3ஆண்டில் தான் எத்தனை மாற்றம் ,சற்று நகரவே பின்னால் ஒரு கை நண்பா வந்துடியா,,, டா.

வினோத்தை பார்த்தேன்.டேய்.. மாமா எப்புடிஇருக்க? என இருவரும் விசாரிக்கவே அல்லிப்பட்டிக்கு புடு புடுவென புல்லட்டில் புறப்பட்டோம்.

வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டு சொந்த ஊருக்கு திரும்புவதனால் எப்போது ஊர் வரும் என்ற தவிப்பு.போகும் வழியில் மயில்கள் பரவசத்தில் பறந்து விரிந்தாடின.

வெகு தூரம் செல்லவே கண்ணில் பட்டது நான் படித்த பள்ளி.

அந்த நாட்கள் ஏழ்மையினும் இனிமை என உணர்ந்தான் கார்த்தி.டேய் தம்பி எப்புட்றா இருக்க! என்றார் வேலன்னே.இவர் கடையில் விற்கும் 1 ரூவா ரஸ்னா மேல் கொல்ல ஆச.அரை மணி நேரம் உருஞ்சுவதில் அவ்வளவானந்தம்.எதுதாபுல முட்டாய் பாட்டி கட உப்பு காரம் போட்ட மாங்கா, நெல்லிக்கானு நாக்கை சுழற்றி நகர,டேய் ஞாபகம் இருக்கா, டபுள் பெடல் போட்டு கீழ விழுந்தோமே,வள்ளி கூடசிரிச்சாளே அந்தடம்டா மாமா என வினோத் சொல்ல குனிந்து முட்டியைப்பார்க்கத் தழும்பு பல்லைகாட்ட வீட்டையடைந்தேன்.

வீட்டின் முட்புறத்தில் நான் சிறுவயதில் செல்லமாக கிழவி என்று அழைத்து அடிவாங்கிய என் பாட்டி,கோழிக்கு உணவிட்டிருக்க, ஏன் ராசா ஆ வந்துட்டியா பா என முகம் மலரவே, அம்மாவும் அப்பாவும் தங்கையும் வந்தனர்.நலம் விசாரித்தபடி வீட்டினுள் சென்றோம்.சிறுது நேரத்தில் குளித்துவிட்டு வரவே,

ஆட்டின் உடல் பாகங்கள்.

இலையில் சிதறிக் கிடக்க.சாப்பிடு சாப்பிடு என சாப்பிடச்சொல்லி. சாப்பிட்டுத்தீர்த்தேன்.

நான் சிறுவயதிலிருந்தே அம்மா பிள்ளை,அப்பாவோ கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்.நான் ஊருக்கு வந்து சில நாட்கள் கழியவே;என்னிடம் ஒரு புகை படத்தை காண்பிக்கவே, இவள் யாருன்னு சொல்லு பாப்போம்? எனக் கேட்டாள் அம்மா.விமலாவோ என சந்தேகித்து அவள் இவ்வளவழகியா? என்று சந்தேகித்து தயங்கியபடி தெரியல னு சொல்ல டேய். இவ தாண்டா உன் அத்த பொண்ணு விமாலான்னு, நாற்காலியின் நான்கு புறத்திலும் இருந்து சிரித்தார்கள்.அம்மாவின் பல நாள் கனவு,

எனக்கு விமலாவைக்கட்டி வைத்து விடவேண்டுமென்று, விமலாவோடு விளையாண்ட நாட்கள் உரசிச்சென்றன .எனினும், நன்றாகச் சென்ற வாழ்க்கையில் கல்யாணம் என்றவுடன் சற்று களைப்பாகவே

*காட்சியளித்தேன் என் நண்பர்கள் புலம்புவதை பார்த்து, "எனினும், அப்படி நடக்காது" என்ற நம்பிக்கையும் எனக்கு இருந்தது.சில தினங்களில் இரு வீட்டார் முன்னிலையில் ஆரவாரமாக*

*நடந்து முடிந்தது திருமணம்.வாழ்கையை அழகாக மாற்ற வேண்டும் என்று துடித்தது மனது.என்னை அவளும் அவளை நானும் புரிந்துகொண்டோம். எனக்கு மகிழ்ச்சியோ இல்லையோ என் அம்மாவுக்கு பூரண மகிழ்ச்சி. சரியாக இரண்டு மாதத்தில் வாந்தி எடுத்தாள் விமலா. நாடியை பிடித்து பத்து மாதத்தில் குழந்தை என்றாள் கிழவி.எதையோ சாதித்த அலாதி மகிழ்வு.மேலும் எங்களின் வாழ்விற்கு உறுதுணையாய் பிறந்தாள் "மாலா".*

வெளிநாட்டில் வேலை பார்த்த எனக்கு மீண்டும் வீட்டை பிரியவும், விமலாவை விட்டு பிரியவும் விருப்பமில்லாமல் போகவே,ஊரிலுள்ள பஞ்சு ஆலையில் கணக்காளராக பணியில் சேர்ந்தேன்.வேலை சற்று கடினம் தான் என்றாலும் எனக்கு அது பிடித்து போகவே முழுமனதுடன் செம்மையாக பொறுப்போடு செய்தேன்.

விமலாவிற்கு வீடு கட்ட வேண்டும் என்ற ஆசை.

ஆனால், போதிய வருமானமற்று வாழ்க்கை நகர்ந்தது. அடுத்த மாதம் மாலாவை பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று பல்வேறு இன்னல்கள்.

இதற்கிடையில் ஆலையின் தூசுகள் மூக்கில் நுழைய மருத்துவச்செலவு என கார்த்தியின் மனம் கரகமாடியது.

முகம் குனிந்து திண்ணையில் அமரவே மாமா வந்தவுடன் நிமிர்ந்தது.

"இந்த பயலுக்கு என்னா ஆச்சு இப்புடிலா உக்காரமாட்டானே"என்று விமலாவ கேக்க, விமலா புலம்பவே, கார்த்திஈ.. கார்த்திஈஈ... இங்க பாரு,

இப்ப என்ன குடியா முளிகிடுச்சு கவலபடாதடா,,,

அந்தா தெரிதுல நீலகலர் பெயிண்ட் அடுச்சவீடு அங்க போ.,,,

நம்ம நாட்டாம வீடுதா.

அவர், யார்னாலும் ஒதவி செய்ற மனுசேன்.

ஆனா காச மட்டு சீக்கிரமா கேப்பாரு....

விமலாவோ கார்த்தியை பார்த்து,, சரி நம்ம தந்துடலாம்.எதாவது பொழப்ப பாப்போம். இப்புடியே இருந்து என்ன பன்றதுன்னு. விமலாவும் சொல்ல,,

நாட்டாமட்ட போயி பொழப்பு தலப்ப பாரு.இப்புடியே உக்காந்து ஒன்னு ஆகப்போரதில்லேன்னு மாமாவு சொல்ல,,,

நாட்டாமட்ட போய் 5000 பணம் வாங்கினான் கார்த்தி.

விமலா சொல்றா,"நம்ம கிட்ட இருக்க நெலத்த வச்சு பயிர கியிற போடுவோம்" னு சொல்ல,,, ஆனா கார்த்தி, கெணத்துல அங்க தண்ணி, கொட்டி கடக்குதாணு கேட்க,,,,

ஊரே மழைய நம்பித்தான் இருக்கு..மழை கண்டிப்பா பேயும் அந்த வர்ணபகவான் நம்மள கை விடுவாரா என்ன?, "தட்டபயிர்" போடுவோமென இருவரும் முடிவெடுத்தனர். வயலில் இறங்கி தீவிரமாய் மழையை எதிர் பார்த்து விடுவிடுவென விதைக்க ஆரம்பித்தான் கார்த்தி.

மழையும் ஓரிரு நாட்களில் பெய்யவே விமலாவிற்கும் கார்த்திக்கும் கொல்ல ஆனந்தம். ஆராய் பெருக்கெடுத்தது. நாம் பட்ட கஷ்டத்திற்கு கடவுள் நம்மை எப்போதும் கைவிட மாட்டார் என்று நினைத்திருந்த வேளையில் எப்போதும் பெய்கிற மழையை விட அதிகமாகவே, அவ்வருடம் கொட்டி தீர்த்தது..

மகிழ்ச்சி ஒரு பக்கம் பயம் ஒரு பக்கம் என்று ஊரே பீதியில் ஆழத்திருக்க ஊர் மக்கள் நினைத்தவாறே ஆற்றில் கரை புரண்டோடிய வெள்ளத்தினால்

பல வயல்களின் பயிர்கள் அடித்துச்செல்லப்பட்டன. அதில் கார்த்தியின் வயலும் சிக்காமலில்லை, வயலை பார்த்ததும் கண்களில் நீர் தாரை தாரையாய் கொட்டி தீர்க்க, ஆறுதல் சொல்ல விமலாவின் மனம் முன்வந்தது.

ஊர் முழுக்க துக்க வீடுகளாய் காட்சியளிக்கிறது. நாட்டமைட்ட வாங்கின கடன வேற அடைக்கனுமேனு புலம்பி தவித்தவனாய் இரவெல்லாம் உறங்காமல் அங்கேயும் இங்கேயும் நடந்தவனாய்,,,மனதில் ஏதேதோ தோன்ற

நொருங்கியவனாக அவ்விரவில் உலாவுகிறான் கார்த்தி.

எனக்கு ஏன் இவ்ளோ கஷ்டத்த கொடுத்த கடவுளேனு,, இரவு மேலும் மேலும் துயரில் ஆழ்த்த, நாம வாழ்ந்து என்னா ஆவப்போவுது என விரக்தியோடு அனுகினான் கார்த்தி,,,

திடீரென கால்கொலுசு சப்தம் காதை வந்தடைய "மாலா' புரண்டு படுத்தாள்.

மாலாவின் முகம் முன்பு வந்தது.

எப்படி நான் சாவதென, அவன் மனது கேள்வி எழுப்ப? மாலாவே முன்னால வந்து,

அப்பா என்னைவிட்டு போக உனக்கு எப்புடி மனசு வந்துச்சு, என கேட்பதை போல் உணர்ந்தான் கார்த்தி.

மறுநாள் விடிந்தது.

தனது குல தெய்வத்தை வணங்ககிவிட்டு வேலை தேட புறப்படுகிறான். பிரபல துணிக்கடை ஒன்றில் கணக்காளர் பணிக்கு ஆட்கள் தேவை என்ற பதாகையை பார்த்தான் கார்த்தி. மூன்றாம் தளத்தில் ஆட்கள் தேர்வு செய்யப்படுவதாக அறிந்தான்.

மூன்றாம் தளத்தை அடையவே, ஒரு அறையை முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். ஹச் ஆர் வரவில்லை என்ற பேச்சும் ஓடிக்கொண்டிருந்தது.

வேலை தேட வந்த ஒருவர் நான் வேறு நிறுவனத்திற்குச் செல்கிறேன் எனப் புறப்பட்டார்.

கடிகாரத்தில் வேகமாக வட்டமடித்தது நேரம் காட்டும் முள்.

காலை பத்து மணிக்கு சரியாக ஆட்சேர்ப்புக்கான நேர்காணல் நடைபெறும் என்றுள்ளதே, மணி இரண்டாகியதே என எண்ணினான்.சற்று நேரத்தில் கூட்டம் கலைந்தது.

இப்போது மணி சரியாக மூன்றரையை நெருங்கியது. இந்த வேலையும் நம்மை கைவிட்டதே, என்று நினைதிருந்த வேளையில்,

கருப்பு கோட் அணிந்த ஒருவர் மேலே வந்தார்.

"சாப்டியா தம்பி" எனக் கேட்டார்.

அப்போது அவர் யாரென்று புலப்படவில்லை. உங்க கூட வந்தவங்க எங்க தம்பி? எனகேட்கவே காத்திருந்துச் சென்று விட்டதாகச் சொன்னான்.

எங்க கடைல பொறுமைக்கு தான் தம்பி வேலை என அன்பாக தோளைத்தட்டினார்.

சரி.மேல போங்க போய் சாப்டு வாங்க.

"யு ஆர் அப்பாயின்டட்" என்றார் ஹச் ஆர்.

**ஜா. முகமது இலியாஸ்,**
**முதுகலை முதலாமாண்டு.**



## பழமொழி அறிவோம்!

**ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணத்தை நடத்தலாம்.**

(சரியானது…)

**"ஆயிரம் பேருக்கு போய் சொல்லி ஒரு திருமணத்தை நடத்தலாம்"**







1989 இல் வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். இப்படத்தை விசு நடித்து அவரே இயக்கினார். அன்றைய சூழலில் மிகவும் புரட்சிகரமான குடும்பத் திரைப்படம். மேலும் இன்றைய தலைமுறைக்கும் மிகவும் தேவைப் படுகின்ற கருத்தை கொண்டுள்ளது. யார் குழந்தை? என்ற ரேடியோ நாடகத்தை மூலமாகக் கொண்டு எடுக்கப்பட்ட இந்த படத்தில்
விசு (தன் மகளைக் கட்டிக்கொடுத்துள்ள மாமனார்)
டெல்லி கணேஷ், மனோரமா (விசுவின் சம்பந்தி) சரண்யா (டெல்லி கணேஷின் பெண் ; கைம்பெண் நிலையில் உள்ளவள் ) ஆகியோர் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

தன் மகளின் புகுந்த வீட்டிற்கு வரும் பெண்ணின் தந்தை (விசு), மருமகனின் அக்கா ஒரு கைம்பெண் என்று அறிகிறார். அப்பெண்ணைப் பற்றி அவர்கள் வீட்டில் உள்ள அனைவரும் அக்கறை காட்டாமல் இருக்கின்றனர். அவளின் மூன்று சகோதரர்களுக்கும், அவளின் பெற்றோருக்கும் அவளின் உணர்வுகளைப் புரிய வைக்க ஒரு நாடகம் ஆடுகிறார் அந்த சம்மந்தி. அதில் அந்த குடும்பத்தில் உள்ள மற்றோரின் சிக்கல்களைக் கையாளும் முறை மிகவும் திறமையானது. அவளின் தனிமைக்கு மாற்றாக குடும்பத்தினர் கோவில், பக்தி புத்தகம், பாட்டு கச்சேரி சபா டிக்கெட் என தரும் போது அவளை முன்னிறுத்தி அக்கறையைத் தருபவராக விசுவின் பாத்திரம் அமைகிறது. ஒரு பெண் இறந்ததும் அவள் கணவன் புதுமாப்பிள்ளை; ஆனால் அதுவே ஒரு பெண்ணுக்கு நடந்தால் அவளின் வாழ்வின் கோலம் என்ன என்பதை எடுத்துச் சொல்லும் கதையாக நகர்கிறது. அப்பொது திடீரென்று அந்த குடும்பத்திற்க்குள் வரும் ஒரு குழந்தை யார்? அது வரும் காரணம் என்ன? அதன் பெற்றோர் யார்? என்ற அடுக்கடுக்கான கேள்வியும் அதன் பதிலில் குடும்பத்தின் பல சிக்கல்களைத் தீர்க்கின்றன. கைம்பெண்ணுக்கு மறுமணம் செய்வது அந்த காலத்தில் சமூகத்தில் எளிதில் ஒப்புக்கொள்ளப் படாத ஒன்றாகும். இப்படிப்பட்ட நிலையில் அந்த பெண்ணுக்கு மறுமணம் செய்து வைக்க முயற்சிக்கிறார் சம்மந்தி, அதை செய்து முடிக்க முடிந்ததா என்று செல்லும் கதை . படம் முழுக்க முழுக்க விசுவின் வசன ஆதிக்கம் நிறைந்துள்ளது. குறிப்பாக இப்போ மூத்த மருமகன் வீட்டில் காப்பியை வைத்தே காமெடியில் கருத்து சொல்லி ஒரு கலக்குகலக்கியுள்ளார்.என்னதான் ஜனரஞ்சகமான படமாக இருந்தாலும் இதன் மூலம் அவர் வெளிப்படுத்திய கருத்து மிகவும் கவனிக்கத்தக்கதாக அந்த காலத்தில் இருந்தது. 5D, VISUVAL EFFECTS, ANIME போன்ற வளர்ந்து வரும் திரைத் துறையின் இன்றைய சூழலில் இது போன்ற படங்களைப் பார்ப்பது இளைய தலைமுறைக்கு சினிமா சார்ந்த மாற்றுக் கோணத்தைத் தருகிறது.

**பி.லீ.தயாநிதி,**
**முதுகலை இரண்டாமாண்டு.**









## சின்னஞ்சிறு பழக்கங்கள்

புத்தகம் : சின்னஞ்சிறு பழக்கங்கள்
ஆசிரியர் : ஜேம்ஸ் கிளியர்.
தமிழில் : நாகலட்சுமி சண்முகம்

தவறான பழக்கங்களைத் தகர்ந்தெறித்து நல்ல பழக்கங்களை உருவாக்குவதற்கான எளிய வழிகளைத் தொகுத்து வழங்கி இருக்கிறார். ஜேம்ஸ் கிளியர். நடைமுறைக்கு உகந்த பயனுள்ள ஒரு புத்தகம்.

கடுகளவு மாற்றங்கள் கற்பனைக்கெட்டா விளைவுகளை தரும் என்று வாழ்வில் பெரிய ஆளாக வரவேண்டும்.என்ற கேள்வியோடு வலம் வருகிறவர்கள் தேடிப் படிக்கிற புத்தகங்களில் ஒன்று தான் ஜேம்ஸ் கிளியர் எழுதிய சின்னஞ்சிறு பழக்கங்கள் (Atomic habits], இதனை தமிழில் நாகலட்சுமி சண்முகம் என்பவர் மொழிபெயர்த்து இருக்கிறார். இந்த நூல் குறித்த சிறு அறிமுகத்தைத் தான் இங்கே பார்க்க இருக்கிறோம்.

சிறிய பழக்கங்கள் எப்படி பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது? பழக்கங்கள் சுயமேம்பாட்டின் கூட்டு வட்டியாகும்.

ஒரு குறிப்பிட்ட நிலையைக் கடக்கும்வரை சிறிய மாற்றங்கள் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாததுபோலத் தோன்றக்கூடும். கூட்டுச் செயல்முறையினால் உருவாகின்ற சக்திவாய்ந்த விளைவுகள் தாமதமாகவே ஏற்படும். ஆனால் அந்த விளைவுகள் பொறுமையாக இருக்க வேண்டும் என்ற மிக முக்கியமான சிந்தனையைத் தன் எழுத்துக்களின் மூலம் ஆசிரியர் கூறுகிறார்.

வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழிவகைச் செய்யும் கூறுகளான,

தவறான மோசமான பழக்கத்தைக் களைவது எப்படி?

எளிய நடவடிக்கைகள் மூலம் சிறப்பான பழக்க வழக்கங்களை வளர்ப்பது எப்படி ?

ஒரு நல்ல பழக்கத்தை உருவாக்குவது எப்படி?

வெற்றிக்கான பெரும் அச்சுறுத்தல் எது என்ற கேள்விக்கு வெற்றிக்கான மாபெரும் அச்சுறுத்தல் சலிப்பே அன்றி தோல்வி அல்ல என்ற பதில் ஆழ்ந்த சிந்தனையை நமக்குள் விதைக்கிறது. வெற்றியாளர்கள் அந்நிலையை அடைய காரணம் எது என்ற நம் மனதின் கேள்விக்கு

'வெற்றியாளர்கள் ஓர் அட்டவணையை உருவாக்கி அதை ஒழுங்காகக் கடைப்பிடிக்கின்றனர். தோல்வியாளர்கள் இடையூறுகளுக்கு இடமளிக்கின்றனர்' என்ற கருத்து நமக்கு முன்னேற வழி செய்கிறது. வெற்றியைப் பெற அடையாளமற்ற சுதந்திரம் பெற வேண்டும் என்ற விதியை நமக்கு வலியுறுத்தி சொல்கிறது இந்த நூல்.

மிகவும் நுணுக்கமாக பார்த்தால்,

"நமது ஒவ்வொரு நாளையும் நாம் அணுகுகின்ற விதத்தையும் வாழுகின்ற விதத்தையும் மாற்றக்கூடிய தனிச்சிறப்புக் கொண்ட ஒரு புத்தகம் இது' என்ற கருத்து நமக்கு புலனாகிறது.

பழக்கங்கள் + பிரக்ஞையுடன்கூடிய பயிற்சி = மேதமை கருத்தை ஆட்கொண்டு வந்த புத்தக்கமே சின்னஞ்சிறு பழக்கங்கள்.

**ம. தாரணி,**
**இளங்கலை இரண்டாமாண்டு.**

### உலகப் பொதுமறை

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு** (குறள் – 396)

**பொருள்:**
மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும், அதுபோல் மக்கள் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

சித்திர தையலில் ஜமால் இலச்சினை...




ச.மோகன தாரணி
இளங்கலை இரண்டாமாண்டு

பயன்மிகு பாதை வகு




செ.ராகவி
இளங்கலை முதலாமாண்டு

தனிமை ...



இர்பானது ஸஹ்தியா
இளங்கலை இரண்டாமாண்டு

புறா...



மு.யாசர் அராபத்,
இளங்கலை மூன்றாமாண்டு

இயற்கை...



மு.கிருத்திகா
இளங்கலை முதலாமாண்டு